DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure)
***
IN THE COURT OF SUBORDINATED JUDGE MADURANTAKAM

Calender :
Miscellaneous : SC No. 191/2022
Deposition of Witness for : PW 1

| Name. | திரு. விஜய், சிறப்பு உதவி ஆய்வாளர் |
|---|---|
| Father /Husband Name | |
| Village | |
| Taluk | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day 01.09.2025

**எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

## முதல் விசாரணை

1) நான் தற்பொழுது பீர்க்கன்கரணை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன். கடந்த 06.12.2021 அன்று நான் மதுராந்தகம் மதுவிலக்கு அமல் பிரிவில் தலைமைக் காவலவராக பணி புரிந்த பொழுது என்னுடன் தலைமைக் காவலர் பால சுப்பிரமணியன் மற்றும், ஆய்வாளர் பரிபூரணம் அவர்களும், சூனாம்பேடு காலனி பகுதியில் ரோந்து சென்றபொழுது சந்தேகத்திற்கு இடமான ஒரு நபர் எங்களைப் பார்த்தவுடன் ஓட முயற்சி செய்தார். அவரை நாங்கள் மடக்கி சோதனை செய்த பொழுது அவரிடம் 3 வெள்ளை நிற பையில் 100 மிலி கொள்ளளவு கொண்ட 1050 பாக்கெட்டுகள் இருந்தன. அதனை வாங்கி நாங்கள் முகர்ந்து பார்ததபொழுது கண் எரிச்சல் மற்றும் வாய் குமட்டல் ஏற்பட்டது. நாங்கள் சந்தேகப்பட்டு அதிலிருந்து மாதிரிக்காக 1 அரை லிட்டர் வாட்டர் பாட்டிலில் எடுத்துக் கொண்டு மீதம் உள்ளவற்றை அழித்தோம். பொதுமக்கள் யாரும் சாட்சியம் அளிக்க முன் வராததால் என்னையும், தலைமைக் காவலர் பாலசுப்பிரமணியம் அவர்களையும் சாட்சியாக வைத்து ரசாயண பரிசோதனைக்காக அரை லிட்டர் பாட்டில் எடுத்துக் கொண்டு மீதம் உள்ளவற்றை அங்கேயே கொட்டி அழித்தார். **அந்த**

**கைப்பற்றுதல் மற்றும் அழித்தல் மகசர் அ.த.சா.ஆ. 1 மற்றும் 2**. பின்னர் எதிரியுடன் காவல் நிலையம் வந்து எதிரி மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

2) சம்பவ இடத்திற்கு செல்லும் பொழுது பாக்கெட் டைரி எடுத்துச் செல்வது வழக்கம். அந்த பாக்கெட் டைரியை எனது ஆய்வாளரிடம் சமர்ப்பித்துள்ளேன். அவ்வாறு கண் எரிச்சல் மற்றம் வாய் குமுட்டல் ஏற்பட்டதற்கு நான் மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை பெறவில்லை. சம்பவ இடத்திற்கு ஆய்வாளர், நான் மற்றும் தலைமைக் காவலர் பாலசுப்பிரமணியன் ஆகியோர் சென்றோம். சம்பவ இடத்திற்கு நாங்கள் அனைவரும் ஆய்வாளரின் காரில் சென்றோம். சூனாம்பேடு வரை நாங்கள் இருசக்கர வாகனத்தில் சென்று அதன் பின்னர் ஆய்வாளர் வாகனத்தில் சம்பவ இடம் சென்றோம். நாங்கள் ரகசியமாகத்தான் ஆய்விற்கு சென்றோம். நாங்கள் வாகனத்தில் சென்றார் அதைப் பார்த்து எதிரி தப்பி ஓடி விடுவார் என்றால் நாஙகள் காவல் வாகனத்தில் செல்ல மாட்டோம், தனிப்பட்ட வாகனத்தில்தான் செல்வோம். அவ்வாறு யாருடைய தனிப்பட்ட வாகனத்தை எடுத்துச் சென்றோம் என்ற விவரத்தை ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். பகுப்பாய்விற்கு எடுக்கப்பட்ட பாட்டில்கள் அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட பாட்டில்கள் இல்லை என்று சொன்னால் சரிதான். பிறிதொரு காவல் ஆய்வாளர் முன்னிலையில் அழித்தல் மகசர் தயார் செய்யப்படவில்லை என்றால் சரிதான். நான் கூறுவதுபோல் சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்றாலம், ஆய்வாளர் தாக்கல் செய்த வழக்கில் புள்ளி விவர கணக்கிற்காக எதிரி மீது பொய்யாக குற்றம் சுமத்துகிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.